DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

**IN THE COURT OF** ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.***

Calendar

Miscellaneous

Preliminary register

Sessions Special CC . 1/ 2017

Deposition of witness for ---- Prosecution : P.W. 4

Name : கோவிந்தன்

Father's Name : ரங்கசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act by Tmt. Kalpana, Assistant of this court on the day of 18.6.2019.

**முதல் விசாரணை**

நான், எடப்பாடி தாலுக்கா அலுவலகத்தில், துணை வட்டாட்சியராக பணிபுரிந்து 31.3.2016 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். நான், சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், எர்ணாபுரம் குறுவட்ட வருவாய் ஆய்வாளராக 10.2.2012 ம் தேதி முதல் 31.1.2013 ம் தேதி வரை பணிபுரிந்து வந்தேன். மேற்படி காலத்தில், சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சங்ககிரி வட்டாட்சியர் அவர்களின்

உத்தரவின் பேரில், நானும், சங்ககிரி வட்டம், கன்னந்தேரி கிராமம், கிராம நிர்வாக அலுவலர் திரு.பி.சிவசண்முகம் என்பவரும், 28.12.2012 ம் தேதி காலை சுமார் 6.00 மணியளவில், சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பு காத்திருந்தோம். சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவுப்படி, ஊ.த.க.பிரிவு காவல் ஆய்வாளர் திரு.N.ரங்கராஜன் அவர்கள், அவர்களுடைய குழுவினருடன் காலை சுமார் 6,30 மணியளவில், சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து, எங்களை அழைத்துக்கொண்டு சுமார் 7.00 மணியளவில், சங்ககிரி வட்டம், கன்னந்தேரி கிராமம், கரையானூர், காட்டுவளவில் உள்ள நெடுஞ்சாலைத்துறையில், உதவி கோட்டப்பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.பன்னீர்செல்வம் அவர்களின் மாமனார், திரு.K.C.அழகுசாமி என்பவருக்கு சொந்தமான வீட்டிற்கு, எங்களை அழைத்து சென்று, அந்த வீட்டினை எங்கள் முன் சோதனை செய்தார். சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்களால் திரு.பன்னீர்செல்வம் மீது பதிவு செய்யப்பட்ட சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஊ.த.க.கு. எண்.8/AC/2012 PC Act 1988 வழக்கு புலன் விசாரணை நிமித்தமாக மேற்படி திரு.K.C.அழகுசாமியின் வீடு சோதனை செய்யப்பட்டது. மேற்படி சோதனையின் திரு.K.C.அழகுசாமி மற்றும் அவருடைய மனைவி சின்னப்பொண்ணு ஆகிய இருவரும் வீட்டில் ஆஜரில் இருந்தனர். காவல் ஆய்வாளர் அவர்கள், திரு.K.C.அழகுசாமியிடம் திரு.பன்னீர்செல்வம் அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட மேற்படி வழக்கு பற்றிய சுருக்கம் மற்றும் வீட்டை சோதனை செய்வதற்குண்டான பிரிவு 165(3) இந்திய குற்றவியல் நடைமுறைச்சட்டம் நீதிமன்றத்திற்கு முன் கூட்டியே அனுப்பிய தகவல் அறிக்கையினை திரு.K.C.அழகுசாமி அவர்களுக்கு படித்து காண்பித்து, திரு.K.C.அழகுசாமியிடம் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி திரு.K.C.அழகுசாமி கையெழுத்து போட்ட ஆவணம் அசா.ஆ.16 ஆகும். மேற்படி சோதனையானது 28.12.2012 ம் தேதி காலை 7.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை நீடித்தது. மேற்படி சோதனையின் போது, எந்த ஆவணமும் கைப்பற்றப்படவில்லை. சோதனை ஜாபீதா ஒன்று தயாரித்தார்கள். அதில் நானும், விஏஓ சிவசண்முகமும் கையெழுத்து போட்டோம். அந்த ஆவணம் அசா.ஆ.17 ஆகும். அதன் பின்பு பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டது. மேற்படி பார்வை மகஜரிலும் நானும், சிவசண்முகமும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர்

அசா.ஆ.18 ஆகும். அசா.ஆ.17, 18 ஆவணத்தின் நகல் ஒன்று திரு.K.C.அழகுசாமிக்கு வழங்கப்பட்டு, அவரிடம் கையெழுத்து பெறப்பட்டது. 29.12.2012 ம் தேதி சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். நான் நடந்த விவரத்தை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** -

முதல் விசாரணையில் சொல்லியுள்ள சட்ட விவரங்களை, நான் படித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால், அது சரிதான். 161 வாக்குமூலத்தில், மேற்படி சட்டப்பிரிவுகள் இருந்ததால், அதனை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், அது சரிதான்.

**<u>மறு விசாரணை</u> -** இல்லை.

Sd/-Tr.கோவிந்தன்

/True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the
Prevention of Corruption Act, Salem.